DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.819/2024

PROSECUTION WITNESS L.W.4/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கௌதம் | தகப்பனார் பெயர் | சின்னச்சாமி |
| கிராமம் | மொடக்குறிச்சி | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 09.04.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு மொடக்குறிச்சியில் குடியிருந்து கொண்டு, வெள்ளாளர் கல்லூரியில் B. com படித்துக் கொண்டிருக்கிறேன்.

2) 21.10.2024 ம் தேதி, இரவு 8.00–8.15 மணியளவில் நான் டூவின் லீவ்ஸ் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் அருகே உள்ள பூக்கடைக்கு வசூலுக்காக சென்றிருந்தபோது, போலீசார் அங்கு பிரச்சனை ஏற்பட்டது சம்மந்தமாக விசாரித்துக் வரைபடம் வரைந்து எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் சொன்ன தேதி, நேரம், இடத்தில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து பூர்த்தி செய்யப்படாத வெள்ளைத் தாளில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.09 15:56:24 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.819/2024

PROSECUTION WITNESS L.W.3/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அஸ்ரப் | தகப்பனார் பெயர் | நிசார் அலி |
| கிராமம் | மூலப்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 09.04.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு மூலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். மொபைல் சர்வீஸ் சென்டர் வைத்து நடத்தி வருகிறேன்.

2) எதிரி சக்திவேல் மற்றும் அ.சா.1 பாஸ்கரனை எனக்கு தெரியும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2024 ம் வருடம் இரவு 9.45 மணியளவில் பாஸ்கரன் என்னை தொலைபேசி மூலம் அழைத்து எனக்கும், சக்திவேல், உஷா ஆகியோருக்கும் பிரச்சனை ஏற்பட்டு விட்டதாக கூறினார். நான் உடனே குவின் லீவ்ஸ் டிபார்ட்மெண்ட் அருகே உள்ள அவரது ஐஸ்கீரிம் கடைக்குச் சென்று பார்த்தபோது, அவரது கடையின் முன்னால் இருந்த கண்ணாடி கதவுகள் உடைத்து கண்ணாடிகள் கீழே கிடந்தது. பின்னிட்டு அவருடன் நானும் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றிருந்தேன். பாஸ்கரன் புகார் கொடுக்கும் போது கத்தியையும் காவல்நிலையத்தில் ஒப்படைத்ததை போலீசார் கைப்பற்றி என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 91 உள்ள சாட்சி கையொப்பங்களில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.09 15:56:36 +0530

1) கடந்த 18.10.2024 ம் தேதி, நானும், நவீனும் எனது நண்பர் பாஸ்கரை பார்க்க அவரது கடைக்கு சென்றோமா என்றால் இல்லை. இரவு 8.00 மணிக்கு சக்திவேல் என்பவர் பாஸ்கர் கடையின் முன்பு வந்து நின்று வெளியே வாடா கண்டாரோழி, தேவிடியா பையா என்று கத்தி சத்தம் கேட்டு வெளியே வந்து வார்த்தபோது எங்கடா என் பொண்டாட்டிய வச்சிருக்க என்று தரக்குறைவாக பாஸ்கரை பார்த்து பேசி அவரது சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி கையால் அவரது முதுகில் குத்தி காலால் உதைத்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. அப்போது நானும் நவீனும் சக்திவேலை பிடித்து அவனது கையில் இருந்த கத்தியை பிடுங்கி அவனை அங்கிருந்து துரத்திவிட்டோமா என்றால் இல்லை. பாஸ்கரிடம் இது பற்றி கேட்டபோது, சக்திவேலின் மனைவி உஷா அவரது அம்மு ஏஜென்சி உரக்கடையில் வேலை பார்த்து வந்ததாகவும், அடிக்கடி சக்திவேல் அங்கு வந்து அவரது மனைவியிடம் குடிக்க பணம் கேட்டு சண்டை போடுவார் என்றும், பின்னர் உஷா கடந்த 1 மாதகாலமாக தங்கள் கடைக்கு வேலைக்கு வருவதில்லை என்றும், ஆனாலும் அவருக்கு பணம் கிடைக்காததால் என்னிடம் உஷாவை காரணம் காட்டி பணம் பறிக்கும் நோக்கத்திலியே தன்னை கொல்வதாக அச்சுறுத்தி வருவதாகவும், என் பொண்டாட்டி கொடுக்கலைன்னா என்ன, நீ அந்த பணத்தைக் கொடு இல்லைன்னா கொன்னு போட்டுவிடுவேன் என கத்தியை காட்டி சக்திவேல் உயிர் பயத்தை ஏற்படுத்தி வருவதாகவும் சொன்னாரா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதையும் பார்க்கவில்லை என மாற்றி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) காவல்நிலையம் சென்றபோது, பாஸ்கரனிடம் போலீசார் புகாரை எழுதி கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றாலும், என்னிடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து நான் புகாரில் மட்டும் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.09 15:56:41 +0530

Judicial Magistrate No.I,

Erode.